**செய்தி வெளியீடு எண்: 782** **நாள்: 27.10.2018**

**விபத்தில்லா கோவை மாநகரை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள "உயிர்" என்ற நிறுவனத்தின் துவக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை (27.10.2018)**

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர்
**திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே**!

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்
**திரு. ஹரிஹரன் அவர்களே!**

கோவை மாநகராட்சி ஆணையர்
**முனைவர் விஜய கார்த்திகேயன்** அவர்களே!

கோவை மாநகர காவல் துறை ஆணையர்
**திரு ஸ்மித் சரண்** அவர்களே!

"**உயிர்**" என்ற தன்னார்வ அமைப்பை துவக்கியுள்ள

**டாக்டர் பாலசுப்பிரமணியம்** அவர்களே !

**டாக்டர் சண்முகநாதன்** அவர்களே !

**டாக்டர் கார்த்திகேயன்** அவர்களே !

**திரு. சஞ்சய் ஜெயவர்தன வேலு** அவர்களே !

**டாக்டர் ராஜசேகரன்** அவர்களே !

மற்றும் இந்த தன்னார்வ அமைப்பின் உறுப்பினர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

இளைஞர்களே! மாணவ மாணவிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**“அரிது அரிது மானிடம் ஆதல் அரிது**
**மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு**
**பேடு நீங்கிப் பிறத்தல் அரிது”**
என்று தமிழ் மூதாட்டி ஒளவையார் அவர்கள்,
மானிடப் பிறவியின் சிறப்பைப் பற்றி
இந்த பாடலில் தெளிவாக கூறியுள்ளார்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மானிடப் பிறவியினை
நாம் வீணாக விபத்துகள் மூலம் இழக்க வேண்டுமா ?
என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

உயிரின் அருமையைப் பற்றி மக்களுக்கு,
குறிப்பாக இளைஞர்களுக்கு எடுத்துரைத்து,
விபத்துகள் இல்லா கோவை மாநகரை உருவாக்க
அரசுடன் கைகோர்த்து செயல்படுவதற்காக
கோவையிலுள்ள சமூக ஆர்வலர்களால் உருவாக்கப்பட்ட
**“உயிர்”** என்ற தன்னார்வ அமைப்பினை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சாலை விபத்துகளினால் உண்டாகும் உயிரிழப்பு, ஊனம்
ஆகியவற்றைத் தவிர்க்க, மக்களிடையே
விழிப்புணர்ச்சி ஏற்படுத்த உருவாக்கப்பட்டுள்ள
அமைப்பின் பெயர்தான் **‘உயிர்’**.

வாகன ஓட்டிகள் விதிகளை மதிக்காமல் நடந்து கொள்வதும்,
மிதமிஞ்சிய வேகமும், குடித்து விட்டு வாகனங்கள் ஓட்டுவதும்தான் கோவையில் நிகழும்

70 சதவீத விபத்துகளுக்கு காரணம் என்கிறது
ஒரு புள்ளிவிவரம். தலைக் கவசம் அணிவது,
சீட் பெல்ட்டுகளை மாட்டிக் கொள்வது,
வாகனங்களை ஓட்டும்போது செல்லிடப் பேசியில்
பேசாமல் இருப்பது போன்ற
அடிப்படை பாதுகாப்பு அம்சங்களைக் கூட
கருத்தில் கொள்ளாமல், பயணிகள் அலட்சியம் காட்டுவது
பல விபத்துகளுக்கு வழிவகுக்கிறது.
வாகனங்களை இயக்குபவர்கள் தங்களது பொறுப்பை உணர்ந்தால் மாற்றங்கள் கட்டாயம் ஏற்படும்.
சாலை பாதுகாப்பு விதிகளும், சாலை பொறுப்புணர்ச்சியும்,
போக்குவரத்து நடத்தையும் ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி
விபத்துகளே இல்லாத கோயம்புத்தூரை
உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான்
**‘உயிர்’** என்ற இந்த அமைப்பு.

இந்த அமைப்பு, சாலை விபத்தினை தடுக்க ஒரு
நூதனமான திட்டத்தினை உருவாக்கியுள்ளதாக அறிகிறேன்.
அதாவது கல்விக் கூடங்களில் சாலை விழிப்புணர்வை
ஏற்படுத்த ‘குட்டி காப்ஸ்’ (Kutty Cops) என்ற ஒரு திட்டம்
செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ்
பள்ளிக் குழந்தைகள் வீட்டின்
கண்காணிப்பு அதிகாரிகளாக செயல்படுவார்கள் எனவும்,
இவர்கள் பெற்றோர், உறவினர், நண்பர் ஆகியோர்
விதிகளை மீறும்போது அவர்களுக்கு
போக்குவரத்து விதிகளை பின்பற்ற வேண்டியதன்
அவசியத்தை வலியுறுத்துவார்கள் எனவும் நான் அறிகிறேன்.

இதன் மூலம் மக்களிடையே ஒரு மாற்றத்தினை சுலபமாக கொண்டுவர இயலும் என நான் நம்புகிறேன்.

"**மக்களால் நான், மக்களுக்காகவே நான்**" என்று தன் வாழ்நாளையே அர்ப்பணித்த மாண்புமிகு அம்மா அவர்கள், மக்களின் வாழ்வை பாதுகாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தினார்கள். அவற்றில் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

❖ மாண்புமிகு அம்மா அவர்களால் **நெடுஞ்சாலை ரோந்து கண்காணிப்பு முறை** ஏற்படுத்தப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் தற்போது 272 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயங்கி வருகின்றன. இவை, விபத்துகளை தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொண்டு வருகின்றன. நெடுஞ்சாலைகளில் விபத்துகள் நேரும்போது இந்த வாகனங்கள் விரைந்து செயல்பட்டு, பாதிக்கப்பட்டோரை அருகிலுள்ள மருத்துவனைகளில் சேர்த்து உயிர்களை காப்பாற்றி வருகின்றன. இதுவரை காயமடைந்த 15,757 நபர்கள் மாநிலம் முழுவதும் இந்த நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

❖ இவ்வாகனங்கள் அனைத்திலும் புவிசார் இருப்பிட முறைமை (GPS) கருவி பொருத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடியே இவ்வாகனங்களின் இயக்கம் கண்காணிக்கப்படுகிறது.

❖ "108" ஆம்புலன்ஸ் சேவை தமிழ்நாட்டில் கட்டணமில்லாமல் வெற்றிகரமாக இயக்கப்படுகிறது. இச்சேவைகள் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இலவசமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் 926 அவசர

கால ஆம்புலன்ஸ் ஊர்திகள் இயங்குகின்றன. ஒவ்வொரு ஆம்புலன்ஸுக்கும் ஒரு முழு பயிற்சி பெற்ற அவசர மருத்துவத் தொழில் நுட்ப நிபுணர் (EMT) மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கிறார். அவசர சிகிச்சைக்கான மருந்துகள் 108 தகவல் அழைப்பு மையத்தில் உள்ள மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் EMT ஆல் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவசர சிகிச்சை வழங்குவதன் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் 4,68,485 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

- அவசர கால இலவச 108 சேவை 7.21 கோடி மக்களுக்கு சேவையாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஒரு அவசரகால ஊர்தி சராசரியாக ஒரு நாளைக்கு 3.9 பயனாளிகளுக்கு சேவை செய்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில்,
மாண்புமிகு அம்மாவின் அரசு,
விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு
உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில்,
கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைக்கு அழைக்கப்படும் பகுதிக்கு அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தி செல்லும் நேரம் குறைய பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்திகளில் ஜி.பி.எஸ். சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- 108 ஆம்புலன்ஸ் செயலி (Avasaram 108 Mobile App) மூலம் மக்கள் அவசர காலங்களில் 108–ஐ அழைக்கும்போது அழைப்பவர்களின்

தகவல்கள் துல்லியமாக மையக்கட்டுப்பாட்டு அறையில் காண இயலும். இதன் வாயிலாக மையக் கட்டுப்பாட்டு அறையில் உள்ள அலுவலர், அழைத்தவரின் அருகாமையில் உள்ள 108 அவசரகால ஊர்தியை GPS கருவியின் மூலம் கண்டறிந்து உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

- 108 அவசர கால ஓட்டுநர் செயலி அறிமுகம் செய்யப்பட்டு, ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களுக்கு ஆன்ட்ராய்டு கைபேசி வழங்கப்பட்டுள்ளது.
- சாலை விபத்தில் காயம் அடைந்த பிறகு முதல் ஒரு மணி நேரம் பொன்னான மணித்துளிகள் என்று அழைக்கப்படுகிறது. அந்த முதல் ஒரு மணி நேரத்தில், சரியான முதலுதவி வழங்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பும், காயங்களின் தீவிரத்தன்மை குறைவதற்கான வாய்ப்பும் அதிக அளவில் உள்ளன. இதனால் தான், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால பாதுகாப்பு திட்டம், பொன்னான மணித்துளிகள் கொள்கையில் கவனம் செலுத்தி, சிகிச்சை வழங்குவதற்கான காலத்தை குறைக்க அதிக கவனம் செலுத்துகிறது.
- இந்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் பதிற்குறிப்பு நேரம் சராசரியாக நகர்ப் புறங்களில் 13 நிமிடமாகவும், ஊரகப் பகுதிகளில் 17 நிமிடமாகவும், சாலை போக்குவரத்து விபத்துகளுக்கு 13 நிமிடமாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களை
தொலைவில் இருக்கும் மருத்துவமனைகளுக்கு
கொண்டு செல்லும்போது உரிய அவசர சிகிச்சை அளித்து
அவர்களது உடல்நிலையை சீராக்க
அவசர சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது.
அவசர சிகிச்சை மையம் என்பது
ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு மருத்துவமனைகளில்

3 முதல் 6 படுக்கைகளுடன் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தில் வெண்ட்டிலேட்டர் போன்ற உயர்ந்த உயிர் காக்கும் கருவிகளும் உள்ளன. இம்மையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் தாம்பரம் அரசு மருத்துவமனை, பாடியநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டது. இம்மையங்களின் செயல்பாட்டினால், 2013ஆம் ஆண்டு முதல் மார்ச் 2018 வரை 23,949 நபர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. கூடுதலாக 10 அரசு மருத்துவமனைகளில் இம்மையங்கள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

"**மருத்துவமனைக்கு வருமுன் தகவல் அறிவிப்பு**" முறை மூலம் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மருத்துவமனையில் அமைந்துள்ள அவசர சிகிச்சை மையத்திற்கு (TI) தொடர்பு கொண்டு விபத்தில் காயம் அடைந்தவர்கள் பற்றிய குறிப்புகளை முன்கூட்டியே அறிவிப்பதன் மூலம் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

- சென்னை அரசு கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
- மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை,
- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
- கன்னியாகுமரி மருத்துவ கல்லூரி மருத்துவமனை,
- சேலம்அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை,
- வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை

ஆகிய உயர்நிலை மருத்துவமனைகளில்

விபத்து சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
கூடுதலாக, கரூர், கிருஷ்ணகிரி, கோவில்பட்டி மற்றும்
திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள
அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில்
தலைக்காய மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
மேலும், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மற்றும் கும்பகோணம்
மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில்
விபத்து சிகிச்சை மையங்கள் 28 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட உள்ளன.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட
அரசு மருத்துவமனைகளிலும் விபத்து சிகிச்சை மையம்
துவக்கப்பட உள்ளது. இதுபோன்று தமிழ்நாட்டில் உள்ள
அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்கனவே உள்ள
விபத்து சிகிச்சை மையங்களை தரம் உயர்த்துதல் மற்றும்
விபத்து சிகிச்சை மையங்களை துவக்குதல் போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட**
**மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் இந்த ஆண்டில்**
**விபத்துகளுக்கான மரண விகிதம் 8.27லிருந்து 4.89 ஆகவும், அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் மரண விகிதம் 5.51–லிருந்து 2.72 ஆகவும் குறைந்துள்ளது.**

விபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

உயரிய சிகிச்சை வழங்குவதற்காக
215 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு
செயல்படுத்தி வருகிறது.

எனவே உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில்
மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனித வளம் மற்றும்
கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும்,
தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக
திகழ்ந்து வருகிறது. இவ்வாறு பல முன்னோடி திட்டங்களை
செயல்படுத்தி வருவதன் காரணமாக
'நிதி ஆயோக்' வெளியிட்டுள்ள
'சுகாதாரமான மாநிலம் – முற்போக்கு இந்தியா'' அறிக்கையில்
மூன்று முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக
தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல்
பாதுகாப்பான சாலைகள் மற்றும் மேம்பாலங்கள்
தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் பயண நேரம்
வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதுடன்,
விபத்துகளும் தடுக்கப்பட்டுள்ளது.

விபத்தில்லா நாட்டினை உருவாக்குவதற்கு
அரசுடன் மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.
மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில்
உங்களைப் போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்

ஈடுபட வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும்
தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்துடன் பேசி,
அங்குள்ளவர்களுக்கு போக்குவரத்து விதிகளை
பின்பற்றுவது பற்றியும், விபத்தினால் ஏற்படும்
பாதிப்புகளைப் பற்றியும் எடுத்துரைக்க
கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடத்தி
மக்களிடையே ஒரு புரிதலை ஏற்படுத்த
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.
விபத்து பற்றிய குறும்படங்களை ஆங்காங்கே திரையிடுதல்,
விளம்பர அறிக்கைகளை மக்களிடையே விநியோகம் செய்தல்,
விபத்தினை கண்டவுடன், பாதிக்கப்பட்டவர்களை
உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுதல்
போன்ற பணிகளை அரசுடன் சேர்ந்து
உங்களைப் போன்ற தன்னார்வ அமைப்புகள்
செய்வதன் மூலம் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை
அறவே தவிர்க்க முடியும் என்று நான் உறுதியுடன் நம்புகின்றேன்.

இறைவன் நமக்கு பல்வேறு சாதனைகளை புரிவதற்காக
இந்த அரிதான மானிடப் பிறவியினை அளித்துள்ளான்.
அதனை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.
Slow and steady, wins the race என்ற
ஆங்கில பழமொழிக்கேற்ப நிதானமாகவும்,
கவனமாகவும் பணியாற்றினால்
நாம் வாழ்க்கையில் பல வெற்றிகளைப் பெறலாம்.
இதனை நாம் வாகனங்களில் பயணம் செய்யும்போதும்
கடைபிடிப்போம் என உறுதி எடுத்துக் கொள்ள

உங்களை நான் அன்புடன் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை மாநகரத்திலே **“உயிர்”** அறக்கட்டளையின் சார்பாக, விபத்தில்லாத ஒரு கோவை மாநகரமாக உருவாக்க வேண்டுமென்று இந்த அறக்கட்டளையை உருவாக்கியிருக்கின்றார்கள். இந்த அறக்கட்டளை துவங்குகின்றபோதே என்னை வந்து சந்தித்து, நீங்கள் வந்து இந்த **“உயிர்”** அறக்கட்டளையை துவக்கி வைக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரும் வேண்டுகோள் வைத்தார். அதை ஏற்று நான் இங்கே வந்து உங்களோடு கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றதில் உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இது தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாக Role model–ஆக இந்த அறக்கட்டளை திகழ்வதற்கு இன்றைக்கு துவக்கமாக உங்கள் மூலம் **“உயிர்”** அறக்கட்டளை துவக்கப்பட்டிருக்கின்றது என்று மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். மரியாதைக்குரிய டாக்டர் ராஜசேகரன் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, இதனுடைய நோக்கத்தைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்கள். இதற்காக முதற்கட்டமாக **“உயிர்”** அறக்கட்டளையின் சார்பாக 4.5 கோடி ரூபாய் நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு உபகரணங்கள் வாங்கி, இங்கே வைத்திருக்கிறோம் என்ற அந்த தகவல்களையெல்லாம் இங்கே சொன்னார்கள். இன்றைக்கு இதன் மூலமாக விபத்துக்களை தடுக்க முடியும், விபத்துக்களை குறைக்க முடியும் என்று தெளிவாக குறிப்பிட்டார்கள். ஆங்காங்கே, சாலை சந்திப்புகளிலே இங்கே இருக்கின்ற நவீன கேமராவை அமைக்கின்றபொழுது . அந்த கேமரா மூலமாக எந்த விபத்தும் ஏற்படாமல் தடுக்கின்ற நோக்கோடு இந்த App உருவாக்கியிருக்கின்றார்கள். இன்றைக்கு, காவல்துறை உடனடியாக அதைக் கண்டறிந்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து எதிர்காலத்திலே,

விபத்தில்லாமல் ஒரு மாநகரமாக உருவாக்குவதற்கு பேருதவியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இங்கே சுட்டிக்காட்டுகின்ற பொழுது, ஆம்புலன்ஸ் செல்கின்றபொழுது அந்த சாலை சந்திப்பில் இருக்கின்ற signal உடனடியாக அந்த ஆம்புலன்ஸிற்கு வழிவிடுகின்ற விதத்திலே அதையும் ஏற்பாடு செய்திருக்கின்றோம், உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியது. ஏனென்றால், signal போட்டவுடனேயே அது ஒரு குறிப்பிட்ட நேரம் இருந்த பிறகுதான் அது அணையும். அதுவரைக்கும் காத்திராமல், அந்த ஆம்புலன்ஸ் வருகின்றபொழுதே அதை படம்பிடித்து, உடனடியாக அந்த signal–ஐ மாற்றி, அந்த ஆம்புலன்ஸ் செல்வதற்கு வழிவிடுகின்ற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள், அதுவும் பாராட்டுக்குரியது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல இன்றைக்கு கோவை மாநகரத்தை பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஏற்கனவே கோடிட்டுக் காட்டினார்கள், இதை விபத்தில்லா ஒரு மாநகரமாக உருவாக்க வேண்டுமென்று இந்த **“உயிர்”** அறக்கட்டளை ஆரம்பித்திருக்கின்றீர்கள். உங்களுக்கு உறுதுணையாக அரசு செயல்படும். ஏனென்று சொன்னால், சாலை சந்திப்புகளில் தான் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அப்படி சாலை சந்திப்புகளில் எல்லாம் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கின்ற சமூக ஆர்வலர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே பல்வேறு பாலங்கள் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல உப்பிலிபாளையம் வரை கிட்டத்தட்ட 9.5 கிலோமீட்டருக்கு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு விரைவாக அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான விரிவான திட்ட அறிக்கை

தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணி முடிந்தவுடன், பாலம் அமைக்கின்ற பணி துவங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, ஆத்துப்பாலம் இன்றைக்கு ஆய்வு மேற்கொள்ள இருக்கின்றோம். அதுவும் அம்மாவினுடைய அரசில் தான் அந்தப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. காந்திபுரம் மேம்பாலத்திற்கும் அம்மாவினுடைய அரசுதான் நடவடிக்கை எடுத்து, அந்தப் பணிகள் முடிந்து இன்றைக்கு போக்குவரத்து மக்களுக்காக துவக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கோவை மாநகரத்திலே கனரக வாகனங்கள் மற்றும் வெளியூர் செல்கின்ற வாகனங்களெல்லாம் நகரத்திற்குள் வந்துசெல்கின்ற காரணத்தினாலே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றன. அதற்கு புறவழிச்சாலை வேண்டுமென்று ஏற்கனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, கோவை மாநகரத்திற்கு உள்ளே வராமலேயே கோவை புறநகர் பகுதியில் கோவை கிழக்கு புறவழிச்சாலை, கோவை மேற்கு புறவழிச்சாலை என்று 2 புறவழிச்சாலைகள் அமைப்பதற்கும் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கான நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மரியாதைக்குரிய டாக்டர் ராஜசேகரன் அவர்கள் சொல்லுகின்றபொழுது, கோவையிலே பல்வேறு சாலைகளை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே சுட்டிக்காட்டினார்கள், அவை எந்தெந்த சாலைகள் என்பதைப் பற்றியும் கடிதம் மூலமாக கொடுத்திருக்கின்றார், அதையெல்லாம் அரசு பரிசீலித்து முடிந்த அளவிற்கு அந்த சாலைகளையும்

அகலப்படுத்தவதற்கான நடவடிக்கையும் அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, நான் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து அனுமதியை பெற்றிருக்கின்றோம். கிட்டத்தட்ட 2011 ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னை நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக எனக்கு வாய்ப்பு தந்தார்கள். அதிலிருந்து கிட்டத்தட்ட 2018 ஏழாண்டு காலம் இந்தத் துறையின் அமைச்சராக இருக்கின்றேன். இந்த துறையின் அமைச்சராக இருந்த காலத்திலே, இன்றைக்கு மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு, நமது சாலைகளையெல்லாம் தரம் உயர்த்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நிதி கேட்டிருக்கின்றோம். அவர்கள், தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துவதற்கு நீங்கள் பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, கிட்டத்தட்ட மாநிலத்தில் இருக்கின்ற 40 சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த வேண்டும் என்று தேர்வு செய்து, மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசு முதல்கட்டமாக எடுத்துக்கொண்ட சாலைகளில், 12 சாலைகளில் உடனடியாக அந்தப் பணி துவங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், எஞ்சிய சாலைகளையும் விரைவாக பணிக்கு எடுத்துக்கொள்வதற்கு மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பல்வேறு பகுதிகளிலிருந்து பேருந்துகள் வருகின்றன. நகரத்தின் மையப்பகுதிகளில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்துகள் எல்லாம் நகரத்திற்குள்ளிருந்து வெளியே வரும்பொழுது போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அதையும் குறைப்பதற்காக Bus Port என்ற பேருந்து மையத்தையும் நாங்கள் உருவாக்குவதற்கு மத்திய அரசிடம் கேட்டிருக்கின்றோம். அது மத்திய அரசின்

பரிசீலனையில் இருக்கின்றது. அது விரைவிலே துவங்கும். இதன் மூலம் நகரங்களிலே போக்குவரத்து நெரிசல் ஓரளவு குறைகின்ற வாய்ப்பு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இன்றைக்கு சென்னையிலிருந்து சேலம் வரை எட்டுவழிச்சாலை அமைக்க மத்திய அரசிடம் கோரிக்கை வைத்து, மத்திய அரசும் அதற்கு அனுமதியளித்து, அதற்குண்டான நில அளவீடுகள் பணி முடிவடைந்துவிட்டது. இது குறித்து நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினாலே சுணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. சேலத்தில் மட்டுமல்ல, கோவைக்கும் வருவதற்கும் அது வசதியாக இருக்கும். ஏனென்று சொன்னால், சென்னையிலிருந்து கோவைக்கு வரவேண்டுமென்றால், 77 கிலோமீட்டர் மிச்சமாகின்றது. மேலும் விபத்துக்கள் குறைகின்றன, நேரம் மிச்சப்படுகிறது. இவையெல்லாம் இந்த சாலை அமைப்பதன் மூலம் ஏற்படுகின்ற நன்மை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அந்தத் திட்டத்தையும் அம்மாவினுடைய அரசால் விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்து, இந்த **“உயிர்”** அறக்கட்டளை மக்களுக்கு நன்மை செய்கின்ற ஒரு அறக்கட்டளையாக, இன்றைக்கு கோவை மாநகர மக்களுக்கு கிடைத்திருக்கின்றது என்ற செய்தியை தெரிவித்து, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் அவர்கள் தொண்டாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த வாய்ப்பை நல்கியதற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**